அனுப்புநர்

முனைவர்.சி.உஷாராணி,
எம்.எஸ்ஸி., பி.எட்., பிஎச்.டி.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

பெறுநர்

செய்தி ஆசிரியர்,
அனைத்து செய்தி ஊடகங்கள்.

ந.க.எண்.125746 /பி1 / 2021 நாள் :19.08.2021

ஐயா/அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6– பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு மார்ச் 2021 – தேர்வு முடிவுகள் – தற்காலிக மதிப்பெண் சான்றிதழ் ( Provisional Certificate) பதிவிறக்கம் செய்தல் – தொடர்பாக

******

பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு மார்ச் 2021 பள்ளி மாணவர்கள் தற்காலிக மதிப்பெண் சான்றிதழ் பதிவிறக்கம் செய்வதற்கான நாட்கள் குறித்த தகவல்கள் அடங்கிய செய்தி குறிப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அதனை தேர்வர்கள் மற்றும் பொதுமக்கள் அறியும் வகையில் தங்கள் நாளிதழில் / தொலைக்காட்சி / வானொலியில் செய்தியாக வெளியிடும்படி கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

“இது விளம்பரம் அல்ல ” எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இணைப்பு : செய்திக்குறிப்பு

ஒம்/–
இயக்குநர்

# அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6.
# பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு மார்ச் 2021
# தற்காலிக மதிப்பெண் சான்றிதழ் பதிவிறக்கம் செய்வது தொடர்பான செய்திக்குறிப்பு

அரசாணை (நிலை) எண்.48 பள்ளிக் கல்வித் (அ.தே) துறை, நாள். 25.02.2021–ன் அடிப்படையில், பள்ளி மாணவர்களுக்கு பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு மார்ச் 2021 தொடர்பான தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களை **23.08.2021 தேதி அன்று காலை 11.00 மணி முதல் 31.08.2021 தேதி வரை** பதிவிறக்கம் செய்துக் கொள்ளலாம். மாணவர்களுக்கு **பிறந்த தேதி, தேர்வெண்** ஆகியவற்றை அவர்தம் பயின்ற பள்ளிகளில் சமர்ப்பித்த உறுதிமொழி படிவத்தில் குறிப்பிட்டுள்ள கைப்பேசி எண்களுக்கு குறுஞ்செய்தி வழியாக அரசுத் தேர்வுத் துறையின் மூலம் **21.08.2021 தேதி அன்று காலை 11.00 மணிக்கு** அனுப்பி வைக்கப்படும்.

எனவே, பள்ளி மாணவர்கள் **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில், தங்களுக்கான **Roll No, பிறந்த தேதி** ஆகிய விவரங்களை பதிவு செய்து, தற்காலிக மதிப்பெண் சான்றிதழை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அனைத்து பள்ளிகளும் தற்காலிக மதிப்பெண் சான்றிதழை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஒம்/–
இயக்குநர்

இடம் : சென்னை–6
நாள். : 19.08.2021

நகல்

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
3. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.

} தகவலுக்காவும் தக்க நடவடிக்கைக்காவும்